# புது பாதை தந்த ராக்லந்து

**ஞா. ஜேனட் பெல்சியாள்**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 17211244022006
தமிழ்த்துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
அபிசேகப்பட்டி, திருநெல்வேலி

**பேரா. முனைவர். ப. அலிஸ்ராணி**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, சாராள்தக்கர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
அபிசேகப்பட்டி, திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6404

***ஆய்வுச் சுருக்கம்***

*இந்திய திருநாட்டிற்கு அயல் நாட்டிலிருந்து வந்த மிசுனெரிகள் பலர். அவர்களில் திருநெல்வேலி மண்ணில் கால்பத்தவரில் ஒருவர் தாமஸ் கெஜிட்டன் ராக்லாண்ட் என்பவராவர். சி.எம்.எஸ் கிறிஸ்தவ அமைப்பிற்கு அவரின் பங்களிப்புகளையும் ராக்லாந்து ஐயரின் வருகையின் போது திருநெல்வேலியில் பணி செய்த மிசுனெரிகள் வட்டார மிசுனெரிகள், உபதேசிமார்கள் பற்றிய செய்திகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரையின் பொருண்மை அமைகின்றது.*

***கலைச் சொற்கள்***

1. *ஆசிரியப் பயிற்சிப் பள்ளி* – Seminary & School of Theological the Theological Seminary and divinity School
2. *தனிப்பயிற்சி மாணவர்* – Private Student
3. *நிதிகாவலர்* – Treasure
4. *கடவுள் பணியாளர்* – Missionary
5. *பல்கலைக்கழகம்* – University
6. *செயலர்* – Secretary

## முன்னுரை

ராக்லந்து இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவர். இந்திய திருநாட்டிற்கு மிசுனெரியாக வந்தார். இந்திய திருநாட்டிற்கு மிசுனெரியாக வந்தார். அவருக்கு நியமிக்கப்பட்ட பணி சென்னையில் தங்கி சி.எம்.எஸ் செயலர் பணியைச் செய்ய வேண்டும் என்பதாகும். செயலர் பணியை ஏற்கும் முன்பாக திருவாங்கூர், தெலுங்கு நாடு, திருநெல்வேலியில் நடைபெற்ற ஊழியங்களை பார்க்கும்படியாக சென்றார். அந்நாட்களில் அவருடன் பணியத்த தமிழ் உதவியாளர், மிசுனெரிகளைப் பற்றிய பதிவாக இவ்வாய்வு அமைகின்றது.

## இங்கிலாந்தில் ராக்லந்து

தாமஸ் கெஜிட்டன் ராக்லாண்ட் 1815 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ம் தேதி ஜிப்ரால்டர் பிறந்தார். இவர் தாயின் வயிற்றில் இருக்கும் போது தந்தையை இழந்தார். சிறுவனாக இருக்கும் போது தாயாரையும் இழந்தார். அவருடன் பிறந்த சகோதரன், சகோதரி, ராக்லாண்ட் மூவரையும் அவருடைய மாமா சார்லஸ் பிர்ச்சின் பாதுகாப்பில் வளர்ந்தார்கள். 15 வயதில் பள்ளி படிப்பினை நிறுத்திக் கொண்டார். 17 வயதில் லிவர்ப்பூ சார்லஸ் பர்ச் வைத்திருந்த கம்பெனியில் அலுவலகப் பணியைச் செய்தார்.

மீண்டும் ராக்லந்து கார்ப்பஸ் கல்லூரியில் இளநிலை பட்டம் பெற்றார். கெம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சிறப்புடன் வெற்றி பெற்றதால் பல்கலைக்கழகத்தில் வ்பெல்லோ ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். கார்ப்பஸ் கிறிஸ்ற்றிக் கல்லுாரியில் தனிப்பயிற்சி மாணவர்களுக்கு கற்பித்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் சி.எம்.எஸ் சங்கத்தாருடன் தொடர்புடையது. சி.எம்.எஸ் நிதி காவலராகவும் ராக்லந்து பணியாற்றினார். ஹென்றி வென் ஆற்றிய உரை ராக்லந்து இந்தியாவிற்கு மிசுனெரியாக வருவதற்கு காரணமாக இருந்தது. தென்னிந்தியாவிற்கு பணியாற்ற சங்கத்தாரால் தீர்மானிக்கப்பட்டு மனம் நிறைவுடன் ஏற்று இந்தியாவிற்கு வந்தார்.

## தமிழ்நாட்டில் ராக்லந்து

இங்கிலாந்திலிருந்து 1845 ஆம் ஆண்டில் நவம்பர் 20 ஆம் தேதி மாலையில் கப்பலில் பயணம் செய்து 1846 ஆம் ஆண்டில் ஜனவரி முதல் வாரத்தில் சென்னைக்கு வந்து சேர்ந்தார். சென்னையில் சி.எம்.எஸ் செயலராக பணியாற்றிக் கொண்டிருந்த டக்கர் ஐயரால் வரவேற்கப்பட்டார். முதல் வாரத்தில் நான்காம் தேதி சி.எம். எஸ் சிற்றாலயத்தில் பிரசங்கம் செய்தார். சென்னையில் இருந்த போது கமிற்றி செயலகத்தில் டக்கர் ஐயருக்கு உதவியாக இருந்து வேலையைக் கற்குக் கொண்டார். திருநெல்வேலியில் பணி நிமித்தமாக வந்த ராக்லந்து தமிழர்களோடு தமிழர்களோடு தமிழராக பழகி வாழ்ந்தார்.

## தமிழாசிரியரும் உதவியாளரும்

தமிழ் மொழியினை சென்னைக்கு வந்து ஆறு மாதங்களில் கற்றுக் கொண்டார். ராக்லந்து ஜனவரி முதல் ஜூலை வரை சென்னையில் தங்கி தமிழைக் கற்றார். தமிழ்க் கற்றுக் கொடுத்த ஆசிரியரின் பெயர் எங்கும் குறிப்பிடப் பெறவில்லை. ஆனால் தமிழ்க் கற்றுக் கொடுத்த தமிழ் ஆசிரியரின் உதவியாளர் சபாபதி என்பவராவார். சபாபதியிடம் இயேசுவின் அன்பினை ராக்லந்து எடுத்துக் கூறினார். அவரோ பல தெய்வ வணக்கங்களை உடையவராக இருந்தார். எனவே தன்னிடம் வாதிடுவார் என்று எண்ணினார். ராக்லந்து ஐயர் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார் சபாபதி. “துரையே நீங்கள் சொல்லுகிற இயேசு கிறிஸ்துவும், சிவனும் விஷ்ணுவும் ஒரே தெய்வம் தான். பெயர்தான் வித்தியாசம்” என்று கூறினார். அவருக்கு ஏற்ற பதிலைரைத்தார் என்று ராக்லந்து ஐயரின் வரலாறைப் பதிவு செய்துள்ள டி.ஏ. கிறிஸ்தாஸ் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## முத்துசாமி உபதேசியார்

1832 இல் ரேனியஸ் ஐயர் காலத்தில் உருவான சபை ஆலங்குளம். இந்துகளால் ஏற்பட்ட துன்பத்தினால் சபை அழிந்தது. மக்கள் ஒரு சிலரே நிலைத்து நின்றனர். 1841 ஆம் ஆண்டில் மீண்டும் உயிர் மீட்சி பெற்ற நூற்று முப்பது குடும்பத்தினர் சபையில் இருந்தார்கள். மீண்டும் ஆலயம் கட்டப்பட்டு அந்த சபையை பராமரித்து வந்தவர் முத்துசாமி உபதேசியாராவார். ஆலங்குளம் ஆலயத்தின் சபை ஊழியராக

முத்துசாமி உபதேசியார் 'ரவ்பற்றர் ஐயர் கீழ் பணியாற்றினார். ராக்லந்து வந்ததும் அவருடன் பணியாற்றினார்.

### மத்தேயு உபதேசியார்

ஆலங்குளம் சபையை சந்தித்து விட்டு ராக்லந்து மறுநாள் ஆவுடையா நாடானூருக்கு வந்தார். சபை உருவாகி இரண்டு வருடங்கள் கடந்தது. 1845 நல்லூர் வட்டார கிருத்தவர்களுக்கு ஏற்பட்ட கொடிய துன்பத்தால் அதிக சேதமடைந்த சபையாகும். ஆலயம் கட்டுவதற்கு ரூபாய் 200 தேவைப்பட்டது. மக்களிடம் 100 ரூபாய் தான் இருந்தது. கட்டுமானம் தடைப்பட்டது. ஆலயத்தை கட்டி முடிப்பதற்கான ரூபாய் 100 ராக்லந்து கொடுத்தார் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. அந்த சபையில் மத்தேயு உபதேசியார் பணியாற்றார்.

### சி.எம்.எஸ் வட்டாரங்கள்

ராக்லந்து C.M.S வட்டார சபைகளை பார்வையிட்டார். அவையாவன

1. நல்லூர்
2. சுரண்டை
3. பாளையங்கோட்டை
4. ஆசீர்வாதபுரம்
5. சாத்தான்குளம்
6. மெஞ்ஞானபுரம்
7. பண்ணைவிளை
8. பன்னீர்குளம்
9. பாவுர்
10. டோனாவுர்
11. பனைவடலி
12. கடாட்சபுரம்

சி.எம்.எஸ் இன் வட்டாரங்களை அங்கு பணியாற்றி மிசுனெரிமார்களைச் சந்தித்தார். அவரது சந்திப்பு அவர்களுக்கு உற்சாகத்தை கொடுத்தது. ராக்லந்து ஐயர் வருகையின் போது நெல்லை மாவட்டத்தில் சி.எம்.எஸ் பன்னிரெண்டு வட்டார சபைகள் இருந்ததாக "ராக்லந்து ஐயரின் வரலாறு" என்ற நூல் பதிவு செய்துள்ளது.

### ராக்லந்துடன் ஐரோப்பியர்கள்

ஐரோப்பியர்கள் பலர் தமிழ்நாட்டிற்கு வந்து, கடவுள் பணி, தமிழ்ப் பணி, சமூகப்பணி, அரசாங்கப்பணி செய்துள்ளார்கள். இவர்களில் பலருடன் நல்ல பண்பாளராக ராக்லந்து நடந்துகொண்டார். சிறந்த பணியாற்றினார்.

### பெற்றிற் ஐயர்

ராக்லந்து 1846 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் நாள் பாளையங்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். பாளையங்கோட்டையில் மிசுனெரியாக பணியாற்றியவர் பெறிறிட் ஐயர், அவருடைய மனைவி லூயிசா பெற்றிற் அம்மால் இவர்கள் ராக்லந்தை அன்புடன் வரவேற்று கொண்டனர். இவர்களுடன் சில நாட்கள் தங்கி இருந்தார். தமிழர்களை உலகிற்கு பிரகடனப்படுத்திய நெல்லையில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் வரிசையில் நெல்லை மாவட்டத்தில் கால் பதித்த மிசுனெரியாக ராக்லந்து இடம் பெறுகின்றார்.

### ரிச்சர்ட் ஆல்நட்

ஆல்நட் ராக்லந்தின் கல்லூரித் தோழன் ஆவார். 1841ம் ஆண்டு டிசம்பர் மாதத் தில் ராக்லந்தும் ஆல்நட்டும் லிச்ப் வீல்ட் அத்தியட்சர் டாக்டர் பௌஸ்ற்றெட் என்பவரால் (Dr. Bowstead Bishop of Litchfield) உதவி குருப்பட்டம் பெற்றார்கள். ராக்லந்தைப் போலவே தெய்வபக்தி மிக்கவராக இருந்தார். மிசுனெரி ஊழிய வாஞ்சை உடையவராக இருந்தார். ஆல்நட் இங்கிலாந்தின் தென் பகுதியில் ஹார்ட்ப் வீல்டிலும் (Hart Field 1841-1843) கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் விக்கென் சபையில் பணியாற்றினார்.

பாளையங்கோட்டையில் அமைந்த செமினெரியில் பிசுப் சார்ஜன்ற் ஆசிரியப் பள்ளியில் பணியாற்றினார் ஆல்நட். சி.எம். எஸ் மிசுனெரியாக திருநெல்வேலிக்கு வந்தவர் ஆல்நட் பாளையங்கோட்டையில்

(1846-1847) ஓராண்டுகள் மிசுனெரியாக பணியாற்றினார். ராக்லந்து சி.எம்.எஸ் சபைகளை பார்வையிட சென்றபோது அவருடன் சேர்ந்து ஆல்நட் பணியாற்றினார். 1846 இல் நவம்பர் மாதம் திருவாங்கூர் நாகலந்து சென்று சபையினை சந்தித்து முடிந்த மாட்டு வண்டியில் பயணம் செய்து பாளையங்கோட்டைக்கு வந்தார்.

சி.எம்.எஸ் செயலர் பொறுப்பை எண்ணி பயந்து கொண்டிருந்த ராக்லந்தை யோசுவாவுக்கு சொன்ன வேத வசனங்கள் மூலமாக தைரியப்படுத்தினார் ஆல்நட். "நான் உனக்கு கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு "திகையாதே" கலங்காதே, நீ போகுமிடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்". மீண்டும் இராக்லந்து இந்த வசனங்களை வாசித்து தைரியப்படுத்திக் கொண்டார். மிசுனெரியாக பணியாற்றும் ஆர்வத்துடன் வந்திருந்தாலும் உடல் சுகவீனத்தின் காரணமாக ஓராண்டுக்குள் சொந்த நாட்டிற்கு சென்றார் ஆல்நட்.

## ஷாப்வ்ற்றர்

சி.எம்.எஸ் செயலராக பொறுப்பினை பெறுவதற்கு முன்பாக சி.எம்.எஸ் தளங்களை பார்வையிட வந்தவருக்கு நல்லூர் வட்டார மிசுனெரியாக அப்போது பணியாற்றிய ஷாப்வ்ற்றர்ஐயர் மிசுனெரியுடன் அறிமுகம் கிடைத்தது. முதல் சபையான ஆலங்குளம் ஆலயத்தில் ஒரு சில வார்த்தைகளை பேச ஷாப்வ்ற்றர் ஐயர் கூறினார். ராக்லந்து ஆங்கிலத்தில் மக்களோடு பேச அதனை ஷாப்வ்ற்றர் ஐயர் தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்து மக்களிடம் கூறினார்.

ஷாப்வ்ற்றர் ஐயர் சபை மக்களின் பெயர், ஆலயத்திற்கு முந்தைய மாதத்தில் ஆராதனைக்கு வந்தவர் பெயர், வராதவர் பெயர், ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப் பாடங்களைப் படித்தவர் பெயர், படிக்காதவர் பெயர்களை ஆலயத்தில், பெயர்களைப் பார்த்து குறையுள்ளவரிடம் கடிந்துரைத்தும், பாராட்டக் கூடியவர்களிடம் பாராட்டியும் சபை மக்களை உற்சாகப்படுத்தினார். ஷாப்வ்ற்றர் ஐயரின் ஆலோசனைகளைக் கேட்ட மக்கள் இந்துக்களினால் ஏற்பட்ட துன்பத்தால் அழிந்ததங்கள் ஆலங்குளம் சபையில் உள்ள மக்கள் தங்கள் பொன் அணிகலன்களை விற்று புதிய ஆலயத்தைக் கட்டினார்கள். ராக்லந்து ஷாப்வ்ற்றர் ஐயரின் வழியைப் பின்பற்றினார்.

## ஜாண்டக்கர்

1847 ஜனவரியில் ஜாண் டக்கர் ஐயர் சென்னை கமிற்றியின் செயலாளர் பதவியை ராக்லந்துக்கு கொடுக்க ஆயத்தமாயிருந்தார். அவருக்குப் பின் சி.எம்.எஸ் ஊழியங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு ராக்லந்தின் கைக்கு வந்து சேர்ந்தது.

செயலர் பதவியை ராக்லந்து ஏற்ற பின்பும் இரண்டு மாதங்கள் உடன் இருந்து உதவிகள் செய்தார். டக்கர் இரண்டு மாதங்களும் சபை பொறுப்பினை ஜாண் டக்கர் ஐயரே பார்த்துக் கொண்டார். மார்ச் மாதம் சொந்த நாடு சென்றுவிட அனைத்து பொறுப்புகளும் ராக்லந்து கைக்கு வந்து சேர்ந்தது. ராக்லந்துக்கு ஜாண் டக்கரின் உதவி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மூன்றிலும் சி.எம்.எஸ் ஊழியர்களை கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றவர். ராக்லந்து தான் ஆற்றி வந்த சென்னை சி.எம்.எஸ் கமிற்றி செயலாளர் பணியை வெகு திறமையாக செய்தார்.

ஒவ்வொரு மிசுனெரியையும் நேரில் பழகி நன்கு அறிந்து வைத்திருந்தார். மாதத்தில் ஒவ்வொரு நாளில் ஒரு மிசுனெரிக்காக ஜெபிப்பார். கடிதம் எழுதுவார். சி.எம்.எஸ் தாய் சங்கத்திற்கும் செயலர் ஹென்றிவென் ஐயருக்கும் கடிதங்கள் எழுதினார். மிசுனெரிமார்களிடம் தாய் சங்கத்துடனும் நல்உறவு வைத்திருந்தார்.

## முடிவுரை

ராக்லந்து திருநெல்வேலிக்கு சி.எம்.எஸ் மிசுனெரிகளை பார்த்து அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார். ஆவுடையா நாடானூர் போன்ற சபை மக்களின் பக்தி உறுதியாயிருப்பதைக் கண்டு அவர்களுக்கு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். நல்லூர் வட்டார மிசுனெரி ஷாப்வ்றர் ஐயர் பிரசங்கத்தின் மக்களிடம் கேள்விகளைக் கேட்டு பதிலை பெறுகின்ற முறை கண்டு புது விசுவாசிகள் கிறிஸ்தவ அறிவில் வளர்வதற்கு சிறந்த முறை என்று பாராட்டினார். சி.எம்.எஸ் வட்டாரங்களை மிசுனெரிகளுடன் கண்டு உற்சாகம் அடைந்தார்.

ஆல்நட் வருகையில் மகிழ்ந்தார். இருவரும் தைரியமடைந்தார்கள். எல்லாவற்றிலும் ஆண்டவர் தனக்கு உதவி செய்வார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எல்லா செயலகப் பொறுப்பினை மேற்கொண்டார். கடிதம் எழுதுகின்ற பழக்கம் உள்ளவரா இருந்ததால் அவரது கடிதங்கள் வரலாற்றுப் பதிவாக அவரை வரலாற்றைப் பதிவு செய்கின்றது எனலாம்.

## துணை நூற்பட்டியல்


1. அப்பாதுரை. எம், கிறிஸ்துவுக்கா 2000 வரை சி.எஸ்.ஐ திருநெல்வேலி திருமண்டலம் பிள்ளையன்மனை, நாசரேத், 2000.
2. கிறிஸ்துதாஸ் தே.அ, ராக்லந்து ஐயரின் வரலாறு, தென் இந்திய அச்சகம், பாளையங்கோட்டை. 1975.
3. ஞானதுரை ராஜரத்தினம், ஜே. பலிபீடத்தில் பணிவிடைக்காரர்கள், சி.எஸ்.ஐ திருநெல்வேலி திருமண்டலம், திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளைங்கோட்டை. இரண்டாம் பதிப்பு, 2015.
4. ஞானதுரை ராஜரத்தின். ஜே, உலகத்தைக் கலக்கியவர்கள், சி.எஸ்.ஐ திருநெல்வேலி திருமண்டலம், பாளையங்கோட்டை, நான்காம் பதிப்பு - 2017.